**தலைப்பு 279 - கேகாலை மாவட்ட செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) சட்டரீதியான ஒழுங்கு விதிகளினூடாக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுதல்.

(ஆ) அரசாங்கத்தின் பிரதான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் (சமுர்த்தி, மகநெகும மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்) அரசாங்க நியதிகள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்கும் வகையில் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தல்.

(இ) மாவட்டத்தின் அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினூடாக மக்களை வலுவூட்டுவதற்காக நிறைவேற்றப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் நிருவாக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குத் தேவையான ஒருங்கிணைத்தல், இணைப்புச் செய்தல் மற்றும் வழிகாட்டல்.

(ஈ) அரசின் மாவட்ட முகவராக செயற்படுதல்.

(உ) மாவட்டத்தினுள் இயற்கை அழிவுகள் மற்றும் ஏனைய அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் நடைமுறைச் சாத்தியமாக முன்னின்று செயற்படுதல்.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(அ) கேகாலை
(ஆ) மாவனெல்ல
(இ) அரநாயக்க
(ஈ) புலத்கொஹுபிட்டிய
(உ) ரம்புக்கனை
(ஊ) கலிகமுவ
(எ) வரக்காபொல
(ஏ) தெஹிஓவிட
(ஐ) ருவன்வெல்ல
(ஒ) யட்டியாந்தோட்டை
(ஓ) தெரணியகல

## 1.3 கணக்காய்வும் கணக்காய்வின் நோக்கெல்லையும்

கேகாலை மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 18 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு காண்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) ஏடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை**

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| (ii) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றின்மை**

கையொப்பமிடல் பதிவேடு மற்றும் பட்டியல்கள் போன்ற தேவையான சான்றுகள் மாவட்டச் செயலகம் மற்றும் யட்டியன்தொட பிரதேச செயலகம் ஆகியவற்றில் காணப்படாமையால் ரூபா 810,000 கூட்டுத்தொகைக்குரிய 02 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**(இ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 745,944,806 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 738,218,173 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 7,726,633 அல்லது 1.04 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| **செலவு** | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான** | | | **சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 645,044,806 | 644,976,577 | 68,229 | 0.01 |
| மூலதனம் | 100,900,000 | 93,241,596 | 7,658,404 | 7.59 |
| **மொத்தம்** | **745,944,806** | **738,218,173** | **7,726,633** | **1.04** |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 26 அமைச்சுக்கள் மற்றும் 21 திணைக்களங்களினால் ரூபா 3,765,088,007 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதி ஏற்பாட்டிலிருந்து முறையே ரூபா 1,042,126,222 மற்றும் ரூபா 1,553,969,073 என ரூபா 2,596,095,295 கூட்டுத்தொகையானது பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் சேமிப்பு முறையே ரூபா 1,158,275,426 மற்றும் ரூபா 10,717,286 என ரூபா 1,168,992,712 கூட்டுத்தொகையாக அல்லது வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் முறையே 52.6 சதவீதத்திற்கும் 0.7 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சளவில் காணப்பட்டது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| விடய இல. | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 27901 | 42,000,000 | 34,597,409 | 29,000,000 | 34,153,098 | 170,000,000 | 130,554,202 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

27901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 988,215 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

**(உ) பொதுவைப்புக் கணக்குகள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் ரூபா 274,724,388 மீதி காணப்பட்டதுடன், அதில் இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட ரூபா 935,968 கூட்டுத் தொகையான 34 வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (i) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை** | ரூபா | |
| | XLVIII ஆம் அத்தியாயத்தின் 27.11 மற்றும் 31.11 ஆம் பிரிவுகள் | 571,838 | இலஞ்சம் வாங்கியமை காரணமாக கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்த கலிகமுவ பிரதேச செயலக பிரிவின் கிராம உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை திணைக்களத்தினால் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன், குறித்த உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்த திகதியிலிருந்து பணி இடைநிறுத்தப்பட்டு சம்பளம் செலுத்துதல் நிறுத்தப்பட வேண்டிய போதிலும், 2013 திசெம்பர் 30 ஆந் திகதியிலிருந்து பணி இடைநிறுத்தப்பட்டு சம்பளம் செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது. கைது செய்யப்பட்ட 2011 நவம்பர் 25 ஆந் திகதி முதல் 2013 திசெம்பர் 30 ஆந் திகதி வரையான காலத்தில் கடமைகள் நிறைவேற்றப்படாதிருந்த போதிலும் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ii) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| | • நிதிப்பிரமாணம் 115(3)(ஆ) | 13,500 | மாவட்டச் செயலகத்தின் உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பில் நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணை முறைப்பாட்டை மேற்கொண்ட குறித்த உத்தியோகத்தருக்கு முன்னைய ஆண்டின் எரிபொருள் செலவினத்தை தீர்ப்பதற்காக முன்னங்கீகாரம் மற்றும் எரிபொருள் பெற்றுக்கொண்டிருந்த நாட்களில் ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டமைக்கான வருகைச் சான்றிதழ் உறுதிப்படுத்தப்படாது எரிபொருள் செலவினம் மீள் நிரப்பப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| • நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 | 623,187 | வழங்களுடன் தொடர்புடைய சந்தர்ப்பங்களில் பொருட்கள் பரிசோதிக்கப்பட்டு உரிய பிரகாரம் கையேற்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டு அங்கீகாரமும் உறுதிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கேகாலை மற்றும் யடியன்தொட பிரதேச செயலகங்களினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு களஞ்சியத்திற்குப் பொருட்கள் கிடைக்காதிருந்த போதிலும், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்பட்டு சான்றுறுதிப் படுத்தப்பட்டு காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| • நிதிப்பிரமாணம் 206 | 334,957 | தெரணியகல மற்றும் ரம்புக்கன பிரதேச செயலகங்களில் பொது வைப்புக்களை மீளளிக்கையில் பயன்படுத்தப் படுகின்ற கோரிக்கைகள் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்த கொடுப்பனவுகள், இரண்டு உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| • நிதிப்பிரமாணம் 237(ஆ) | 161,263 | களஞ்சிய வழங்கல்களுக்காக கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் பொருட்கள் கிடைத்துள்ளமை குறித்தும், அப் பொருட்கள் பதிவேட்டில் அல்லது இருப்புப் புத்தகத்தில் அப்பொருட்கள் கிடைத்ததாக பதியப்பட்டுள்ளமை குறித்தும் சான்றிதழொன்று இணைக்கப்பட வேண்டிய போதிலும், கேகாலை மாவட்டச் செயலகத்தில் 04 சந்தர்ப்பங்களிலும் கலிகமுவ பிரதேச செயலகத்தில் 05 சந்தர்ப்பங்களிலும் இடம்பெற்றிருந்த கொள்வனவுகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணக்கமின்மை**

2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் படி, அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் அறவிடப்படுகின்ற முத்திரைக் கட்டணங்கள் குறித்த நாளில் அல்லது அத்தினத்திற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், மாவனல்ல பிரதேச செயலகத்தில் 2013 ஆம் ஆண்டில் அரிமரங்கள் போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் மற்றும் மதுபான அனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் 08 சந்தர்ப்பங்களில் அறவிடப்பட்டிருந்த ரூபா 311,738 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டணங்களை

உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புகையில் 57 நாட்கள் முதல் 150 நாட்கள் வரையான வீச்சில் காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

## 1.7 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலான பலவீனங்கள்

செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலான தாமதங்கள்

மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூரணப்படுத்த வேண்டிய திகதி | பூரணப்படுத்திய திகதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடி செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | | | | ரூபா | |
| புதிய மாவட்டச் செயலக அலுவலக தொகுதியின் நிர்மாணம் | 294,982,342 | 2011.05.11 | 2013.05.10 | பூரணப்படுத்தப்படவில்லை | 91,216,068 | ஒப்பந்தக்காரரின் செயற்திறனின்மை |
| தெரணியகல பிரதேச செயலகப் பிரிவில் மியனவிட கிராமிய சுகாதார நிலையத்தின் நிர்மாணம் | 678,868 | 2013.12.20 | 2013.12.25 | - | - | -மேற்படி- |
| தெரணியகல பிரதேச செயலகப் பிரிவில் மியனவிட வகல வயல் மதகு நிர்மாணம் | 576,563 | 2013.12.23 | 2014.02.04 | - | - | -மேற்படி- |
| தெரணியகல பிரதேச செயலகப் பிரிவில் ஹம்பானவல பீல்ல வீதிக்கு கொங்ரீட் இடல் | 294,000 | 2013.12.20 | 2013.12.25 | - | - | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| யடியன்தொட பிரதேச செயலக பிரிவில் சீபோன் மகப்பேற்று சிகிச்சை நிலையத்தினை திருத்துதல் | 1,204,998 | 2013.11.27 | 2013.12.27 | - | 110,000 | -மேற்படி- |

**(ஆ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றங்கள் இல்லாத செயற்திட்டங்கள்**

பண்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் கீழ் தெஹிஓவிட பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 290,500 தொகையான 3 செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பிரேரணைகளை சமர்ப்பித்திருந்த அமைச்சரினால் அச் செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தமையால் அச் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 1.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் சர்ச்சைக்குரியவையாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) 2013 மே 03 ஆந் திகதி கேகாலை மாவட்ட திட்டமிடல் பிரிவின் வாகனமொன்று 40,000 கி.மீ. பயணித்த பின்னர் வழங்கிய சேவைக்காக ரூபா 106,740 தொகை கொழும்பிலுள்ள தனியார் கம்பனியொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்தது. ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் திட்டமிடல் பணிப்பாளரின் ஆற்றிய வேலை அறிக்கைகளின் படி அத் திகதியன்று இந்த வாகனம் தெஹிஓவிட பிரதேச செயலகப் பிரிவில் வெளிக்கள உத்தியோகபூர்வ கடமைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கலிகமுவ பிரதேச செயலகத்தின் 2013 திசெம்பர் மாதத்தின் கொடுப்பனவுகளிற்குரிய ரூபா 349,409 கூட்டுப் பெறுமதியுடைய 06 காசோலைகள் கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை வரையுனர்களிற்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) கேகாலை மாவட்டச் செயலகத்தினால் ரூபா 210,000 பெறுமதியான 02 கணனி அச்சியந்திரங்களும் ரூபா 43,925 பெறுமதியான நிறைவேற்று மேசையொன்றும் போட்டி கூறுவிலை கோரல்களின்றியும் கொள்வனவுக் குழுவின் தீர்மானமின்றியும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் உரிய கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகிச் செயற்பட்டிருந்தமைக்கான காரணங்களை விளக்கிய அறிக்கையொன்றின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசத்திற்கு மகுடம் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியிலுள்ளவாறு பூரணப்படுத்தப்பட வேண்டிய 20 செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு 2013 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் மூன்று ஒப்பந்தக் காரரர்களிற்கு 20 சதவீத முற்பணங்களாக ரூபா 86,592,274 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. முறைப்படியாக பட்டோலைகளைத் தீர்க்காது 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த முற்பணங்கள், செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அச் செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகளேனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்படி செயற்திட்டங்களிற்குரிய மதிப்பீடுகள் ஒப்பந்தக்காரரர்களால் தயரிக்கப்பட்டிருந்ததுடன், மாவட்டச் செயலகத்தின் பொறியியலாளரினால் களப் பரிசோதனை செய்யப்பட்டு அவற்றின் சரியான தன்மையினை உறுதிப்படுத்தி பரிந்துரை செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசத்திற்கு மகுடம் 2014 இன் கீழ் கலிகமுவ தேர்தல் பிரிவிலுள்ள கொடியாகும்புர பொது நீர் வழங்கல் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக ரூபா 7,884,420 தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 2013 திசெம்பர் 11 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. நீர் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்குரிய குறித்த பிரதேச தொடர்பான திட்டம் மற்றும் அதற்குரிய விபரமான மதிப்பீடு என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 2013 திசெம்பர் 11 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 7,004,659 இலிருந்து 2014 யூன் 20 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசத்திற்கு மகுடம் 2014 நடமாடும் சேவையின் மூலம் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளாக 11 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக விவசாய தொழில்முயற்சியாளர்களின் காணிகளில் வர்த்தக ரீதியான பழச் செய்கையினை மேற்கொள்வதற்குத் தேவையான பழக் கன்றுகளிற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 396,000 சப்ரகமுவ மாகாண விவசாய பணிப்பாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை, குறித்த பழக் கன்று வகைகள் கிடைத்திருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 237(ஆ)

பிரகாரம் கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 20 ஆந் திகதி வரை குறித்த பழக் கன்றுகள் நலனாளிகளிற்கு கையளிக்கப்பட்டமைக்கான மற்றும் பெற்றுக் கொண்டமைக்காக நலனாளிகளின் பெயர்கள், முகவரிகள் உள்ளடங்கலான கையொப்ப பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கா கேகாலை மாவட்டத்தின் மலர் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோர்களிற்காக இன விருத்தி ஆய்வுகூடமொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 2,400,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இன விருத்தி ஆய்வுகூடத்திற்காக பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,769,620 செலவிடப்பட்டிருந்தது. இந்த இனவிருத்தி ஆய்வுகூடத்திற்காக பணம் செலவிடப்பட்டு 06 மதங்கள் கடந்த பின்னர் 2014 யூன் 18 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் அந்த ஆய்வுகூடத்தில் இன விருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்மையும், தனியார் நாற்று மேடையொன்றில் அந்த ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையும், கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஆய்வுகூட உபகரணங்களும் இரசாயனப் பொருட்களும் அந்த தனியார் நாற்று மேடையாளரின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2012 ஆம் ஆண்டில் கேகாலை பிரதேச செயலகத்தின் கொள்கைத் திட்டமிடல் பணிப்பாளர் (திட்டங்கள்) இற்கு வருகைகள் பதிவேடு, ஓட்டக் குறிப்புகள் மற்றும் ஆற்றிய வேலைகள் அறிக்கைகளின் படி கடமைக்காக வருகை தராதிருந்த 34 நாட்களிற்காக விடுமுறை தினக் கொடுப்பனவுகளாக ரூபா 71,902 தொகையும், எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆற்றிய வேலைகள் என்பன அங்கீகரிக்கப்படாதிருக்கையிலும் வெளிச் செல்லும் பதிவேட்டில் குறிப்பிட்டு முன் அங்கீகாரம் பெறப்படாதும் விடுமுறை நாட்களில் உத்தியோகபூர்வ கடமைகளில் ஈடுபட்டமையினை உறுதிப்படுத்தாதும் கணக்காளருக்கு 20 நாட்களிற்காக பிரயாணச் செலவினமாக ரூபா 8,952 தொகையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நிர்வாகச் செலவினத்திற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 1.10 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

கேகாலை மாவட்டச் செயலகத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் படி, கேகாலை மற்றும் வரகாபொல பிரதேச செயலகங்களில் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஓய்வூதியத்திற்குப் பொறுப்பான விடய உத்தியோகத்தரினால் கணனி தரவுகள் மாற்றியமைக்கப்பட்டு ரூபா 11,067,858 தொகையும், 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில்

கேகாலை மாவட்டச் செயலகத்தின் ஓய்வூதியத்திற்குப் பொறுப்பான விடய உத்தியோகத்தர் ரூபா 6,381,550 தொகையும் என ரூபா 17,449,408 கூட்டுத்தொகையான ஓய்வூதியத்தை மோசடி செய்திருந்தனர்.

## 1.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டிலிருந்து ரம்புக்கன பிரதேச செயலகத்தின் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலனாளிகளிற்கு வழங்குவதற்காக 3,926 கட்டு முருங்கை கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 215,930 செலவிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 ஒக்தோபர் 02 ஆந் திகதி பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட சகல 250 கட்டு முருங்கைக் கன்றுகளும் அழிவடைந்திருந்தன.

## 1.12 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டிலிருந்து 2012 ஆம் ஆண்டின் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்டச் செயலகத்தின் 11 பிரதேச செயலகங்களின் ஊடாக திவிநெகும நலனாளிகளிற்கு ரூபா 5,087,350 செலவிடப்பட்டு ஒரு மாதம் பூர்த்தியான 13,936 கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. 2012 யூலை 10 ஆந் திகதிய 2/2012 ஆம் இலக்க திவிநெகும சுற்றறிக்கையின் 5.2.1(1) ஆம் பந்தியின் பிரகாரம் நலனாளிகளிற்கு நாட்டுக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக பண்ணைக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டிருந்தமையினால் அச் செயற்திட்டத்தின் இலக்கிடப்பட்ட குறிக்கோள்களிலிருந்து விலகிச் செயற்பட்டிருந்தது. .

(ஆ) 2011 பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யடியன்தொட பிரிவிலுள்ள பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுச் சங்கங்களிற்கு பகிர்ந்தளிப்பதற்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 72,640 செலவிடப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2014 சனவரி 24 ஆந் திகதி வரை அப் பொருட்கள் குறித்த சங்கங்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தெரணியகல மற்றும் அரநாயக பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 03 கைத்தொழில்களை கணக்காய்வினால் பௌதீக பரிசோதனை செய்கையில் அளவுத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டிருந்த அளவுகளைக் காட்டிலும் பௌதீக அளவுகள்

வேறுபட்டிருந்தமை காரணமாக ரூபா 13,905 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தெரணியகல பிரதேச செயலகத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 03 நடை பாலங்களின் பகுதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,018,456 செலவிடப்பட்டிருந்த போதிலும், அப் பாலங்கள் முழுமையாக பூரணப்படுத்தப்படாமை காரணமாக செலவிடப்பட்ட பணத்திற்கு ஈடான நலன்கள் பொது மக்களிற்கு கிடைத்திருக்கவில்லை.

(உ) தெரணியகல மற்றும் யடியன்தொட பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 02 கைத்தொழில்களை கணக்காய்வினால் பௌதீக பரிசோதனை செய்கையில் ரூபா 740,594 கூட்டுத்தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 09 வேலை வியடங்கள் உரியவாறு நிறைவேற்றப்பட்டிருக்காமை காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டன.

## 1.13 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 42 | 37 | 5 |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | 20 | 10 |
| (iii) | இரண்டாம் நிலை | 992 | 791 | 201 |
| (iv) | ஆரம்ப நிலை | 115 | 93 | 22 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | - | - |
| | மொத்தம் | 1,179 | 941 | 238 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 05 பதவிகள் உள்ளடங்கலாக 238 வெற்றிடங்களை நிரப்பவதற்கு மாவட்டச் செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.